**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.II, கள்ளக்குறிச்சி.**

முன்னிலை : திருமதி.ஆர்.ராஜேஸ்வரி, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.II,
கள்ளக்குறிச்சி.

2019-ம்ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள், வியாழன் கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 1/2019**

அரசுக்காக:
காவல் உதவி ஆய்வாளர்,
கீழ்குப்பம் காவல் நிலையம்,
குற்ற எண்.474/2018

... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

செல்வம் வ.19
த/பெ.சிவா
உண்ணாமலை பாளையம்,
சாதகுப்பம் கிராமம்
திருவண்ணாமலை மாவட்டம். ... எதிரி

****

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 08.01.2019ந் தேதியில் கோப்பில் எடுக்கப்பட்டு அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்களும் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.இளையாப்பிள்ளை, அவர்களும் ஆஜராகி இருந்து வந்த இவ்வழக்கு 23.04.2019 அன்று இறுதியாக எடுக்கபட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலனை இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கிடும்.....

**தீ ர் ப் பு ரை**

கடந்த 13.10.2018ம் தேதி இரவு சமார் 10.00 மணியளவில் வாதியான வெங்கடேசனின் தம்பி சாட்சி2ஆனவர் தனது TN 15 Y 0354 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor Pro இருசக்கர வாகனத்தில் நைனார் பாளையம் சென்று மளிகை சமாமான் வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்து வாசலில் நிறுத்தி விட்டு சென்ற மேற்படி இருசக்கர வாகனத்தை எதிரியானவர் தனக்கு ஆதாயம் வேண்டி மேற்படி வாகனத்தின் பூட்டை உடைத்து திருடி சென்று குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 379ன் படி தண்டிக்கப்படவேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக என்றும் கீழ்குப்பம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் அவ்வாறு தாக்கல் செய்த இறுதி அறிக்கையை பார்வையிட்டு பரிசீலனை செய்து அவ்வாறு இவ்வழக்கு நடுவர் அவர்களால் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனதும் குவிமுச பிரிவு 207ன் படி நகல் வழங்கப்பட்டு போதிய அவகாசம் வழங்கி, குற்றம் பற்றி வினவிட எதிரி தன் மீதானக் குற்றத்தினை மறுத்தார். எனவே எதிரி மீது இதச பிரிவு 379ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்துக்காட்டி வினவிய போதும் எதிரி தன் மீதானக் குற்றத்தினை மறுத்தார். எனவே அரசுத்தரப்பு சாட்சியை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.த.சாஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 ஆக சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளது, சான்றுப் பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>5. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>..**

இவ்வழக்கில் அ.சா.1ஆக வெங்கடேசன் தனது முதல் விசாரணையில் தான் தற்போது பெத்தாசமுத்திரம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த 13.10.2012ம் தேதி தனது தம்புக்கு சொந்தமான டிஎன் 15 ஒய் 0354 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை தனது தம்பி எடுத்துகொபண்டு நைனார் பாளையம் சென்று மளிகை சாமான்கள் வாங்கிகொண்டு அன்று இரவு 10.00 மணியளவில் மேற்படி பைக்கை தன் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு தூங்க சென்று விட்டார் என்றும், மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது வாசலில் இருந்த பைக்கை யாரோ திருடி சென்று விட்டார்கள் என்றும், தானும் தனது தம்பியும் பல இடங்களில் தேடிபார்த்தோம் என்றும், பைக் கிடைக்காததால் கீழ்குப்பம் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது தன்னுடைய கையெழுத்து தான். அது அதசாஆ.1 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.2ஆக ரவி தனது முதல் விசாரணையில் தான் தற்போது பெத்தாசமுத்திரம் கிராமத்தில் வசித்து ஹெல்த் இன்ஸ்பெட்டராக வேலை செய்து வருகிறேன என்றும், கடந்த 13.10.2012ம் தேதி தனக்கு சொந்தமான டிஎன் 15 ஒய் 0354 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை தான் எடுத்துகொண்டு நைனார் பாளையம் சென்று மளிகை சாமான்கள் வாங்கிகொண்டு அன்று இரவு 10.00 மணியளவில் மேற்படி பைக்கை தன் அண்ணன் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு தூங்க சென்று விட்டேன என்றும், மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது வாசலில் இருந்த பைக்கை யாரோ திருடி செனறு விட்டார்கள் என்றும், தானும் தன் அண்ணனும் பல இடங்களில் தேடிபார்த்தோம் என்றும், பைக் கிடைக்காததால் கீழ்குப்பம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.3ஆக சிவரஞ்சினி தனது முதல் விசாரணையில் தான் தற்போது பெத்தாசமுத்திரம் கிராமத்தில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன். கடந்த 13.10.2012ம் தேதி எனது கொழுந்தனாருக்கு சொந்தமான டிஎன் 15 ஒய் 0354 என்ற எண்ணுள்ள இருசக்கர வாகனத்தை அவர் எடுத்துகொண்டு நைனார் பாளையம் சென்று மளிகை சாமான்கள் வாங்கிகொண்டு அன்று இரவு 10.00 மணியளவில் மேற்படி பைக்கை தங்கள் வீட்டு வாசலில் நிறுத்திவிட்டு தூங்க சென்று விட்டா என்றும், மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது வாசலில் இருந்த பைக்கை யாரோ திருடி சென்று விட்டார்கள் என்றும், தன் கணவரும் தன் கொழுந்தனாரும் பல இடங்களில் தேடிபார்த்தோம் என்றும், பைக் கிடைக்காததால் கீழ்குப்பம் காவல் நிலையத்தில் தன் கணவர் புகார் கொடுத்தார் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக

போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.4ஆக பரமசிவம் தனது முதல் விசாரணையில் தான் தற்போது பெத்தாசமுத்திரம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த ஆண்டு டிசம்பர் மாததம் 4ம்ததி காலை சமார் 08.00 மணிக்கு மேல் கீழ்குப்பம் போலிசார் திருட்டு வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வை மதகசர் தயார் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான். அது அதசாஆ.2 ஆகும். தன்னுடன் ராஜேந்திரன் என்பவரும் கையெழுத்திட்டார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.5ஆக ராஜேந்திரன் தனது முதல் விசாரணையில் தான் தற்போது பெத்தாசமுத்திரம் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 4ம்தேதி காலை சுமார் 09.00 மணியளவில் கீழ்குப்பம் போலிசார் திருட்டு வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் வரைந்து பார்வைமகசர் தயார் செய்து கொண்டிருந்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான். அது அதசாஆ.3 ஆகும் தன்னுடன் பரமசிவம் என்பவரும் கையெழுத்திட்டார் எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இவ்வழக்கில் அ.சா.6ஆக சாமிநாதன் சிறப்பு உதவி ஆய்வாளர் தனது முதல் விசாரணையில் தான் தற்போது கீழ்குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 04.12.2018 தேதி காலை 8.00 மணிக்கு காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது வெங்கடேசன் த/பெ.தங்கராசு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்குப்பம் கா.கு.எண்.474/2018 பிரிவு 379 இதச படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கு பதிவு செய்து அன்றைய தினமே காலை 9.00 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் பரமசிவம், ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் தயார் செய்தேன். சாட்சி 1 முதல் 5 வரை விசாரணை செய்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.12.2018 தேதி இந்த வழக்கில் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சிகளான சாட்சி6 முருகேசன், மற்றும் சாட்சி 7 பார்த்திபன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து, மேலும் இவ்வழக்கில் சம்பந்தபட்ட எதிரி க.கா.கு.எண்.897/2018ன் பிரிவு 379 வழக்கில் சிறையில் இருந்தவர்க்கு பிடி வாரண்ட் பெறப்பட்டு 07.1.2019 தேதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து கீழ்குப்பம் கா.நிலைய கு.எண்.474/2018 நீதிமன்ற அடைப்பு காவல் பெற்று எதிரி செல்வம் த/பெ.சிவா என்பவர் மீது பிரிவு 379ன் படி இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை அதசாஆ.4 ஆகும். மாதிரிவரைபடம், பார்வைமகசர் அதசாஆ.5,6 ஆகும். ஒப்புதல் வாக்குமுலம் மற்றும் கைப்பற்றுதல் அதசாஆ. 7,8 ஆகும் என சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசுத்தரப்பு சாட்சியம் அ.சா.6 உடன் முடித்துக்கொள்ளப்பட்டு, அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) (ஆ)ன் கீழ் வினவியபோது, எதிரி தான் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக கூறி குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்துள்ளார்.

<u>தீர்வுக்குரிய பிரச்சினை..</u>

7. இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவு 379ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

8. கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சாட்சி2 தனது வீட்டு வாசலில் முன்பு நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தின் பூட்டை உடைத்து TN 15 Y 0354 என்ற எண்ணுள்ள Hero Splendor Pro இருசக்கர வாகனத்தை, எதிரி திருடிச்சென்று தனக்கு லாபத்தையும், வாதிக்கு நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளார் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார்.

9. கற்றறிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்வதாகவும், எதிரியின் வறுமையை கருத்தில் கொண்டு குறைந்தபட்ச தண்டனை விதிக்க வேண்டினார்.

10. அ.சா.1 வெங்கடேசன் தனது இருச்சக்கர வாகனம் காணவில்லை என்று கீழ்குப்பம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து, பின்னர் திருடுபோன இருசக்கர வாகனமான Hero Splendor Pro TN 15 Y 0354 என்ற எண்ணுள்ள வாகனத்தை நீதிமன்றத்தின் மூலமாக பெற்றுக்கொண்டதாக சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.6 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் எதிரி தான் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்ததில் இருந்தும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் எதிரி தான் குற்றத்தை ஒப்புக்கொள்வதாக குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்ததில் இருந்தும் எதிரிக்கு எதிரான இதச பிரிவு 379ன் கீழ் இருசக்கர வாகனமான Hero Splendor Pro TN 15 Y 0354 வாகனத்தை திருடியதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. இறுதியாக எதிரி இதச பிரிவு 379ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து அவருக்கு அளிக்கவிருக்கும் தண்டனை குறித்து கு.வி.மு.ச. பிரிவு 248(2)ன் படி வினவியபோது, எதிரி பின்வருமாறு கூறினார்,

" *எதிரியின் வயது மற்றும் அவரது குடும்ப சூழ்நிலையை கருத்தில்கொண்டு தனக்கு குறைந்தபட்ச தண்டணை விதிக்குமாறு கூறினார்.*"

எதிரியின் வேண்டுகோள், எதிரியின் வயது, வழக்கின் தன்மை மற்றும் தம்மிச்சையான குற்ற ஒப்புதல், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, எதிரி மீதான இதச பிரிவு 379ன் படியான குற்றத்திற்கு **111 நாட்கள்** மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து கு.வி.மு.ச. 248(2)ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் எதிரி ஏற்கனவே (07.01.2019 முதல் இது நாள்வரை 25.04.2019) சிறையில் இருந்த காலத்தை கழித்து அனுபவிக்க கு.வி.மு.ச. பிரிவு 428ன் படி உத்தரவிடப்படுகிறது.

11. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான சி.பி.எண்.685/2018ல் கண்டுள்ள இருசக்கர வாகனமான Hero Splendor Pro TN 15 Y 0354 என்ற எண்ணுள்ள வாகனத்தை அதன் உரிமையாளர் இந்நீதிமன்ற சி.எம்.பி. எண்.6876/2018 நாள் 18.01.2019 அன்று இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் அவரே வைத்துக்கொள்ளவும், பிணைப்பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாகச் சொல்லப்பட்டு, உடனுக்குடன் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 25.04.2019ந் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஓம்.ஆர்.ராஜேஸ்வரி)
நீதித்துறை நடுவர் எண்.2,
கள்ளக்குறிச்சி.

<u>பின் அட்டவணை:-</u>

<u>1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 04.03.2019 | திரு. வெங்கடேசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | 04.03.2019 | திரு. ரவி |
| அ.சா.3 | 04.03.2019 | திருமதி.சிவரஞ்சினி |
| அ.சா.4 | 04.03.2019 | திரு.பரமசிவம் |
| அ.சா.5 | 04.03.2019 | திரு.ராஜேந்திரன் |
| அ.சா.6 | 23.04.2019 | திரு. சாமிநாதன் சிறப்பு உதவி ஆய்வாளர் |

<u>2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 08.12.2018 | புகார்மனு |
| அ.த.சா.ஆ.2 | 04.12.2018 | பார்வைமகசரில் உள்ள அ.சா.4ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 | 08.12.2018 | பார்வைமகசரில் உள்ள அ.சா.5ன் கையொப்பம் |
| அ.த.சா.ஆ.4 | 04.12.2018 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.5 | 04.12.2018 | பார்வைமகசர் |
| அ.த.சா.ஆ.6 | 08.12.2018 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.7 | 08.12.2018 | ஒப்புதல் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.8 | 08.12.2018 | கைப்பற்றுதல் மகசர் |

3. சான்றுப்பொருள்: ஒன்று -

TN 15 Y 0354 Hero Splendor Pro வாகனம் சம்மந்தப்பட்ட புகைப்படம்

4. எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்கள் இல்லை.

குறிப்பு

1. எதிரி விசாரணைக்காலத்தில் சிறையில் இருந்தார்.
2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல்விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
4. தீர்ப்பின் நகல் மேன்மைமிகு தலைமை நீதித்துறை நடுவர், விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உத்தரவிடப்படுகிறது.
5. தீர்ப்பு நாள் 25.04.2019.

(ஓம்.ஆர்.ராஜேஸ்வரி)
நீதித்துறை நடுவர் எண்.2,
கள்ளக்குறிச்சி.

நகல்.. விழுப்புரம் மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.